JAFFNA ... UNDERGRADUATE ...
SEP 11 '68

**Rates**

*Subscriptions :*
Inland Rs. 15-00 per year
Foreign Rs. 20-00 „ „
Single copy 40 cts. (including postage)

*Advertisement :*
On application

*In Memoriam :*
Rs. 12-50 per insertion (within 4 inches)

*Order Nisi :*
Rs. 15-00 for two insertions (within 6 inches)

# The MORNING STAR

உதய தாரகை

Registered as a Newspaper (Established 1841) Published Every Friday

Vol. 128. JAFFNA, FRIDAY, 30TH AUGUST 1968. No. 33.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Notice**

*Please Address :*

(1) All Editorial matter (excluding news) for the English pages) to : The Editor, The *Morning Star*, Vaddukoddai.

(2) All news to the News Editor Vaddukoddai.

(3) All Editorial matter for the Tamil pages to : The Tamil Editor, The *Morning Star*, Parsonage, Alaveddy

(4) All Business correspondence re Advertisements and Subscriptions and all remittances to :

The Manager, The *Morning Star* — A. Kadirgamar, Esq. College Lane, Vaddukoddai.

## Calendar of Events

September 5 and 6 :
Tenth Anniversary Celebrations of the Christa Seva Ashram at Kiran.

O

## CEYLON METHODIST CONFERENCE

The annual Ceylon Methodist Conference, which opened at Kollupitiya last Tuesday evening with the Induction Service of the Rev. Dr. D. T. Niles as Chairman of the Conference, at the Methodist Church, concludes tomorrow. The Church was packed to capacity at this service, the large congregation including representatives from various Christian denominations in the country and two from the British Methodist Conference, the Rev. J. D. Clapham and Mr. C. J. Bennett. Dr. D. T. Niles was inducted by the outgoing Chairman, the Rev. Fred de Silva. After the robing ceremony, he was handed the Bible of Office.

Mr. E. R. de Silva, retired Principal of Richmond College, Galle, was inducted as Vice-Chairman of the Conference, in the morning of Wednesday, the 28th inst., at a special function at the Scott Hall, Methodist College, Kollupitiya.

This morning the portraits of the following, former Chairmen of the Conference, will be unveiled at the Methodist Headquarters at Kollupitiya: the Rev. H. R. Cornish, the Rev. G. B. Jackson, the Rev. G. A. F. Senaratne, the Rev. S. George Mendis, the Rev. Dr James S. Mather, and the Rev. Fred de Silva.

The Public Meeting of the Conference takes place this evening at the Methodist Church, at which the speakers will be the Rev. J. D. Clapham and Mr. C. J. Bennett.

## ALL - CEYLON S. C. M. CONFERENCE

The annual Conference of the Student Christian Movement of Ceylon was held at Jaffna College, Vaddukoddai, from the 24th to the 28th inst. Its theme was: "God at Work." Five Panels were held on the following subjects: "God's Activity in Science," "God's Activity in Social Change," "God's Activity in Religions," "God's Activity in the Church" and "God's Activity in the Christian." They were led by the following respectively: Mr. Duleep Fernando, Mr. Ainsely Samarajiwa, Mr. Ranjith Weddikkara, Dr W. L. Jeyasingham, and the Rev. Kenneth Fernando.

On the morning of last Sunday, the 25th inst., there was a Holy Communion Service, where the C. S. I. Liturgy was followed, at the Cathedral Church, Vaddukoddai, conducted by the Rev. K. J. Mills, assisted by the Rev. Kenneth Fernando, who preached the sermon.

On the last day of the Conference a Retreat was conducted by Miss Irene Lincoln, Vice-Principal and Chaplain of the Methodist Girls' College, Colombo.

The following were among the officials and leaders of the Conference: Mr. Ainsley Samarajiwa (Chairman), Mr. S. N. Sugunanathan (Bible Study), the Rev. Kenneth Fernando and Miss I. Lincoln (Chaplains), and Mr. Duleep Fernando and Mrs. Ainsley Samarajiwa (Worship).

• Mr. Ainsley Samarajiwa was re-elected President of the S. C. M. at the annual meeting held on the 28th inst.

## WINS ESSAY PRIZE

The First Prize for the All-Ceylon English Essay Competition, held by the Ceylon-Pakistan Cultural Association on the subject of "The Role of Pakistan as a Developing Nation Today" has been awarded to Sathiyathasan Thuraisingham, son of the late Mr. C. Thurairajasingham of Chavakachcheri and Mrs. Thurairajasingham, presently of 73, Temple Road, Kokuvil East. An engraved silver chalice was presented to him by His Excellency H. K. Pasha, the High Commissioner for Pakistan, at a banquet held in his residence on the 14th inst.

## WEDDINGS

— The Methodist Church, Kollupitiya, was the scene of a pretty wedding on Wednesday, the 21st inst., when Mr. Deivandrasingham Gnanachandran Buell, and Miss Ratnadevi Curtis, daughter of Advocate T. K. Curtis and the late Mrs. Curtis, were married. There was a very large attendance, and the Church was beautifully decorated with up-country flowers. The Rev. David K. Wilson officiated, the Rev. Arnold Cooper preached the homily, and the Rev. Dr. James S. Mather led the concluding prayers and pronounced the Benediction.

— The marriage was solemnized at the C. S. I. Church, Chavakachcheri, on Monday, the 26th inst. at 4-30 p. m. of Mr. W. Balendran Selvanayagam, of the staff of the Collegiate Department, Jaffna College, and a son of the late Mr. Ankettel Selvanayagam and Mrs. A. P. Selvanayagam, of Hospital Road, Jaffna, and Miss Christabelle Thambirajah, the youngest daughter of the late Mr. R. Thambirajah and Mrs. Thambirajah of Nunavil West. The Rev. J. J. Ratnarajah, assisted by the Rev. K. S. Jeyasingam, officiated at the solemnisation, and the Rev. K. J. Mills preached the homily. The Rev. D. C. Ratnasingham sang a special Thevaram. A reception followed the Church ceremony at the bride's residence.

## OBITUARY

### *Mrs. J. V. Gunaratnam*

Rose Sugirtharatnam passed away peacefully on Tuesday noon, the 20th inst. at the Jaffna Nursing Home. She was the wife of the late Mr. J. V. Gunaratnam and the eldest daughter of the late Mr. and Mrs. S. A. Edward. The deceased was 72 years of age at the time of her death. The funeral took place at her residence at Kokuvil on Wednesday, the 21st evening. The service in the home was conducted by the Rev. J. T. N. Handy, assisted by the Rev. Paul Benjamin. The Rev. A. Veerakathipillai preached the sermon and paid a tribute to the devoted and exemplary life of the deceased. The remains were then removed for interment to the family burial grounds at Koddady, Jaffna. The committal rites were performed by the Rev. Paul Benjamin.

The deceased leaves behind her two daughters — Mrs. Gladys Joseph and Miss Primrose Gunaratnam of the staff of Vembadi Girls' School. And her two brothers — Messrs W. S. Edward and G. N. Edward; and her son-in-law — Mr. R. A. Joseph — and a host of relations and friends to bemoan her loss.

## THANKSGIVING SERVICE

A Service of thanksgiving in memory of the late Samuel Gunaseelan Thambapillai was held on Friday, the 23rd inst., at 5 p. m. at the St. John's Church, Chundikuli. It was a Communion Service in which members of various churches participated. Immediately preceding the service wreaths were laid on the grave and special prayers offered by the Rev. W. R. Cumarasamy.

Just before the sermon, on instruction from the Rev. Cumarasamy the following passage from the Rev. A. W. Boreham, D. D., on "Birthdays and Milestones" was read by Mr. P. T. Gunendran.

"Birthdays are mere records of time, not registers of distance. They tell me how long I have been on the road, not how far I have travelled. The distinction is fundamental. It will never do to judge of our progress by the time we have taken. It will never do to suppose, because I have been a long time on the highway that, therefore, I have travelled a long way. Many of the greatest pilgrims that ever strode along the road succeeded in travelling its whole length without seeing very many birthdays. It is amazing to us nowadays, that people succeeded in crowding into so few years so much achievement, It is evident, since some travel so much faster than others, that we must not confuse milestones and birthdays. Birthdays are not milestones".

"We live in deeds not years; in thoughts not breaths;
In feelings, not in figures on a dial.
We must count time by heart throbs. He most lives
Who thinks most, feels the noblest, acts the best".

The Rev. W. R. Cumarasamy based his sermon on the above passage that was read. He said that Gunaseelan was thirty-two years at the time of his death but he died not young. At home or at school there was no occasion for the parents or teachers to tell him "Do this or don't do that". He won the Mathematics and Physics prizes at the University Entrance class. His University career was very good. As an Engineer of Radio Ceylon, he gave entire satisfaction to his authorities. Above all, he was a kind unoffending soul, winning the affection of all his relations and friends. He seldom meddled in affairs outside his own sphere. His name will be cherished like a fragrant and beautiful tradition by all those who knew him intimately.

The Rev. Mr. Cumarasamy prayed that Gunaseelan's life beyond the veil may be progressive and pleasant.

## SILVER JUBILEE CELEBRATIONS IN COLOMBO

It is 25 years since work was started in Colombo by the former Jaffna Council of the S. I. U. C. and the Executive Committee of the C. S. I. Church in Colombo has decided on the following events to commemorate the Jubilee year.

28 - 9 - '68 : Jubilee Sale

18 - 10 - '68 : Jubilee Social and Service of Thanksgiving

19, 20 and 21 - 10 - '68 : Special Revival Meetings

21 - 10 - '68 : Jubilee Lunch

Proceeds of the Sale will be utilised to make further improvements to the Chapel. All pastors who served in Colombo will be invited to participate in the celebrations in October.

## TO THE U. K. FOR ENGINEERING STUDIES

Mr. Bimal Thambyah, formerly of the Irrigation Department Laboratory in Jaffna, and later full-time student, Ceylon College of Technology, Katubedda, left by air recently to England to complete his Engineering studies and also gain practical experience. He is an Old Boy of Jaffna Central College where he played for the First Eleven teams in Cricket, Soccer, Hockey and captained the Basket-ball team. He is the younger son of Mr. S. E. Thambyah, retired Civil Engineer, C. G. R., and Mrs. Thambyah of Jaffna.

## WORLD DAY OF PRAYER COMMITTEE

The World Day of Prayer Committee met at Hasselby Slott, Vallingby, Sweden, July 20 — 25th, with Mrs. Rathie Selvaratnam, Chairman of the Provincial Committee, presiding. 33 women from 25 countries representing Asia, Africa, Middle East, Europe and the U. K., Canada, North and South America, and the Caribbean were present.

This Committee met to review the 1968 reports from the World Day of Prayer Committees of 126 countries and looked into the history of the World Day of Prayer itself, since its beginning. "We still want to underline that the World Day of Prayer is the ecumenical event in the course of the year which is rooted most deeply in the local congregations and it is probably the most popular expression of ecumenical life and co-operation in our countries", the report stated.

Since the Provincial Committee came into being in Anderson, Indiana, in 1967, the Administrative Secretary, Dr. Margaret Shannon, was asked to make a record of all the official National World Day of Prayer Committees. This record was received and accepted. It was unanimously moved for the formation of the World Committee.

The objects of this International Committee is to take responsibility for the policy and planning of the World Day of Prayer and for the co-operation and development of the different World Day of Prayer National Committees.

There were sub-committees which met to present draft rules for the International World Day of Prayer Committee, the budget, the 1970 service, themes ahead and nominations.

The confirmation of the date, the 1st Friday in March, as proposed by the Working Committee was accepted. The 1970 World Day of Prayer Service submitted by the sub-Committee was received. There were suggestions about: (1) Ways for creating a more genuine sense of inter-dependence on a world scale on matters related to the day; (2) How to make the World Day of Prayer more meaningful in various locations; (3) Guide-lines for future material; (4) General plans for developing themes for the World Day of Prayer, 1970 — '73; (5) Cultivation of new committees and observances; and (6) Relationships with other days of prayer, and with other movements of Christian unity, regional fellowships of women, the W. C. C., the Fellowship of the Least Coin.

It was proposed that one year's total World Day of Prayer offering be contributed towards the rehabilitation and development of a programme to assist in the mental and physical development of women and children who so far were victims of the war, and were growing up in an atmosphere [illegible] by the women of Africa with the theme "Growing together in Christ" was used for the Sunday morning service during the meeting. The Bible Study during the Conference was conducted by Dr. Marga Buhrig.

It was decided that the next meeting of the International World Day of Prayer Committee should take place in September, 1970 in Bangkok, after the Asian Church Women's Conference. The message from the International World Day of Prayer is as follows:

"At this hour of rapid change and crisis in the history of the world and of the Church we are grateful to God that He is confronting us with new ways of growing together and of acting in obedience to His word.

In accordance with the resolution of the International Consultation held in Anderson, Indiana, U. S. A., in July, 1967, a group of 33 women from 25 countries, with the prayerful support of many others, met at Hasselby Slott, Stockholm, Sweden, from July 20 — 26, 1968, to form an International World Day of Prayer Committee. The harmonious atmosphere of the beautiful setting of Hasselby Slott Castle prevailed within the gathering. The rich and joyful experience of learning from others of such varied backgrounds and of sharing in private dialogue, as much as in group discussions, was an unforgettable privilege.

These women felt under compulsion to interpret God's message in a meaningful way to this generation, irrespective of age, race, creed or culture. They were confident that, as they bring their urgent needs to God along with a real sense of their own helplessness, He would direct them into ways of new responsibility and action. In this adventure and struggle to make Love and Hope visible, there is a part for each of us play. Let us pray and dedicate ourselves that, through the World Day of Prayer, an increasing number in every country may become 'partners in renewal'. Knowing the terror as well as the [illegible] 'Now, God be thanked who has matched us for this hour'."

RATHIE SELVARATNAM.

## LAMBETH CONFERENCE

### On Church Unity

Fellowship with the proposed united Churches of North India, Pakistan and Ceylon, encouragement of a more liberal attitude on Intercommunion, and a re-examination of relations with the Church of South India were among the recommendations made by the Lambeth Conference currently in session.

The following are the relevant resolutions :-

(1) "The Conference recommends that, while it is the general practice of the Church that Anglican communicants receive the Holy Communion at the hands of ordained ministers of their own Church or of Churches in communion therewith, nevertheless under the general direction of the Bishop, to meet special pastoral need, such communicants be free to attend the Eucharist in other Churches holding the Apostolic Faith as contained in the Apostles' and Nicene Creeds, and as conscience dictates to receive the Sacrament, when they know they are welcome to do so." (Carried by 351 votes to 75, with 7 abstentions.)

(2) "The Conference recommends that, where there is agreement between an Anglican Church and some other Church or Churches to seek unity in a way which includes agreement on apostolic faith and order, and where that agreement to seek unity has found expression whether in a covenant to unite or in some other appropriate form, a Church of the Anglican Communion should be free to allow reciprocal acts of Intercommunion under the general direction of the Bishop; each province concerned to determine when negotiations have reached the stage which allows intercommunion." (Carried by 341 votes to 87.)

(3) "The Conference recommends:

(a) that, when a Bishop or episcopally-ordained minister of the Church of South India visits a diocese of the Anglican Communion and exercises his ministry in Anglican churches, there should now be no restriction on the exercise of his ministry in other churches with which the Church of South India is in communion.

(b) that Churches and Provinces of the Anglican Communion re-examine their relations to the Church of South India with a view to entering into full communion with that Church."

(4) "The Conference recommends that Churches and Provinces of the Anglican Communion should enter into full communion with the Churches of North India and Pakistan upon their inauguration and should foster relations of fellowship which this involves."

(5) "The Conference recommends that Churches and Provinces of the Anglican Communion should enter into full communion with the Church of Lanka upon its inauguration and should foster the relations of fellowship which this involves."

In the course of the debate on the resolutions concerning intercommunion, the Bishop of Exeter, in opposing them said, that it was all very well to talk about the changing dynamic relations between Churches. But it was precisely because the pace of change was so rapid that there was, in his conviction, 'grave danger' that in their hurry they might let slip something which was of immense importance. He also stressed that the reassessment of the status of non-episcopal ministries in the Church of God would not necessarily involve equating them. To do so would be to abandon the principle of episcopacy to which the Anglican Communion had been so tenaciously loyal in the past.

The Bishop of Lincoln, who expressed an opposing view to that expressed by the Bishop of Exeter, said that the time had come when they must recognise that the love of God and his boundless grace had overflown the narrow boundaries of their own logic. He continued: "I believe we are in grave danger in Christendom of killing the beauty of loveliness of pledged relations of Christians by continuing a vendetta which goes back over the past ages," and added that the Church confessed its penitence, but too rarely did that penitence seem to be carried into action.

The Bishop of Newark, U. S. A., in the course of his speech supporting him, said: "All this time we have been talking about unity, but we have been talking with our eyes, not with our hearts. The position is that we imagine ourselves 'up here' and the others 'down there'. I do not find any place in the New Testament of our Lord asking us to feel superior to other of his disciples. It seems that it is just the other way round. Of course there are anomalies, but the Holy Spirit surely keeps us in balance and it is not for us to imprison him with words or forms. The Quakers do not have baptism or Holy Communion. Are there any of us who would say that they are not Christians, when they put us to shame in so many ways?"

The Presiding Bishop of the American Episcopal Church, in support of these resolutions, said: "In my opinion the resolutions would be a minimal kind of overture by this Church to our Christian brethren, wherever they are, in the interests of the unity of the Church of Christ."

### Honours Paid to Bishops

The Conference adopted this resolution:

"That the Bishops, as leaders and representatives of a servant Church, should radically examine the honours paid to them in the course of divine worship, in titles and customary address, and in style of living: while having the necessary facilities for the efficient carrying on of their work."

The Rt. Rev. Neil Russell, Assistant Bishop of Zanzibar and Tanga, who sponsored this resolution, after speaking of the necessary dignity and splendour of Church worship, declared: "There is a distinction between the glory given to God and the glory given to us as Bishops. Treating Bishops as princes of the Church makes their claim to be servants of God a matter of incredulity. Bishops often say that these honours are necessary to maintain the witness of the lordship of Christ, but I find little support for this in the Gospels."

Only two or three Bishops voted against the resolution.

— *From the Church Times, London.*

## YOUTH COLUMN

My dear Youngsters,

I wonder how you are spending your holidays. Only a few of you ever think of writing or asking questions. I am sure as young people your mind is constantly turning over many problems. They will range from vital issues of international importance (such as Vietnam, the Asian in Africa and such like) if you are a good reader of foreign affairs, to politics in Ceylon, your future as a Tamil and as Christian and so on. You don't have to write to me if you do not wish to, but I do suggest that it is very important to discuss these things in your own age group and also to arrange group meetings among yourselves where you can invite an older person with some knowledge on the subject to give a talk and then have a discussion. This can be done very easily in your Church youth meetings or S. C. M., Y. M. C. A. and Y. W. C. A. meetings. Since you will be fully responsible for the programme, you can select the subject, the speaker and have a very valuable time.

The world is too full of exciting things happening, that, unless we learn of them constantly, we cannot share the glory and the wonder of life to its best. Knowledge is to be preferred to money, fame or position. Annie Beasant has said,

"Knowledge is essential to conquest, only according to our ignorance are we helpless. Thought creates character. Character can dominate conditions."

"Does thou love life? Then do not squander time, for that is the stuff life is made of."

With all good wishes for a productive and useful holiday.

Yours sincerely,
PETER RABBIT.

c/o The Editor,
Morning Star.

**FLOWERS**
FOR
ALL OCCASIONS
*Phone or write :*
**Lane & Company**
P. O. Box 19
NUWARA ELIYA.
*Grams:* "LANES" — *Phone:* 378

IN MEMORIAM

IN LOVING MEMORY
of
**SITTAMPALAM ARIATHURAI**

*Departed : 3rd September, 1961.*

"Tho' lost to sight, to mem'ry dear
Thou ever wilt remain".

(Inserted by his wife and children.)

7, Kandawatta Road,
Nugegoda. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயதாரகை

கிறிஸ்தவ வார இதழ்] Estd. 1841 [UTHAYATHARAKAI

மலர் 128 ] 30 — 8 — 1968 இதழ் 33

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்த ஜனத்துக்கும் இழிவாம். "


## விசேட திகதிகள்

செப்ரெம்பர் :

5 ஆம் 6 ஆம் திகதிகளில் கிரான் கிறிஸ்தசேவ ஆச்சிரம 10 ஆம் ஆண்டு நிறைவு விழா.

## வாழ்க மணமக்கள்

கனகசிங்கம் — தங்கமணி

26-8-68 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தெ. இ. ச., நுணுவில் தேவாலயத்தில் மறைத்திரு. ஜே. ஜே. இரத்தினராசா அவர்களால் மறைத்திரு. டி. சி. இரத்தின சிங்கம் அவர்களின் உதவியுடன் ஒரு பரிசுத்த விவாகம் நிறைவேற்றப்பட்டது.

மணமகன் :

திரு. வீரவாகு கனகசிங்கம்

( உடுப்பிட்டி பென்ஷனர், திரு. பி. வீரவாகு அவர்களது மகன் )

மணமகள் :

செல்வி தங்கமணி தேவதாசன்

(நுணுவில் காலஞ் சென்ற இளைப்பாறிய ஆசிரியர் திரு. கே. தேவதாசன் அவர்களது மகள் )

மறைத்திரு. இரத்தினசிங்கம் மணமக்களுக்கு நல்லுரை கூறினர்.

○

பாலேந்திரன் — கிறிஸ்ரபெல்

26 - 8 - 68 மாலை 4 - 30 மணிக்கு தெ. இ. ச., சாவகச்சேரித்தேவாலயத்தில் மறைத்திரு. ஜே. ஜே. இரத்தினராசா அவர்களால், மறைத்திரு. கே. எஸ். ஜெயசிங்கம் அவர்களின் உதவியுடன் ஒரு பரிசுத்த விவாகம் நிறைவேற்றப்பட்டது.

மணமகன் :

திரு. டபிள்யு. பாலேந்திரன் செல்வநாயகம்

(விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிகள் பிரிவு ; காலஞ்சென்ற திரு. அக்கிற்றெல் செல்வநாயகம் அவர்களின் மகன் )

மணமகள் :

செல்வி கிறிஸ்ரபெல் தம்பிராசா

( நுணுவில் மேற்கு காலஞ் சென்ற ஆசிரியர் திரு. ஆர். தம்பிராசாவின் மகள் )

மறைத்திரு. கே. ஜே. மில்ஸ் மணமக்களுக்கு நல்லுரை கூறினர்.

மணமகளில்லத்தில் சிறப்பாக உபசாரணை நடைபெற்றது.

## மறுமைப் பிரவேசம்

திருமதி யோ. வே. குணரத்தினம்

காலஞ்சென்ற திரு., திருமதி. எஸ். ஏ. எட்வேட் அவர்களின் சிரேட்ட புதல்வியும், காலஞ்சென்ற ஜே. வீ. குணரத்தினத்தின் மனைவியுமான ரூஸ் சுபீர்த ரத்தினம் சென்ற செவ்வாய்க்கிழமை 20 ஆம் திகதி நண்பகல் மறுமைக்குள் பிரவேசித்தார்.

மறுநாள் மாலை ஆனைக்கோட்டை வீதி கொக்குவிலில் உள்ள அவருடைய இல்லத்தில் மரண ஆராதனை மறைத்திரு. ஜே. என். ஹன்டி அவர்களால் மறைத்திரு. போல் பென்ஜமின் அவர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது. மறைத்திரு. ஏ. வீரகத்திப் பிள்ளை அருளுரை வழங்கிக் காலஞ்சென்றவரின் கடவுள் பக்தியுள்ள முன் மாதிரியான சீவியத்தை மெச்சிக் கூறினார். பின் அவரது உடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப் பட்டது. சேமக்காலை ஆராதனையைக் கனம் போல் பென்ஜமின் நடத்தினர்.

இவரது பிரிவால் துயருறும் இரு பிள்ளைகளுக்கும், மருமகனுக்கும், இரு சகோதரருக்கும், மற்றும் இனபந்துக்களுக்கும், சிநேகிதருக்கும் தேவ தேற்றரவு கிட்டுவதாக.

○

யோன் முத்து

உடுவில் மகளிர் கல்லூரியில் கடந்த 65 வருட காலமாக (லீச் அம்மாள் காலம் தொடக்கம்) ஊழியம் புரிந்து வந்தவரும், உடுவில் கிழக்கைச் சேர்ந்தவருமான திரு. யோன் முத்து மறுமைக்குள் பிரவேசித்தனர். 21 ஆம் திகதி அவரது இல்லத்தில் மறைத்திரு. கே. எஸ். ஜெயசிங்கம் அவர்களால் சேமாராதனை நடத்தப்பட்ட போது உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி ஏ. எச். பரமசாமி திரு. முத்துவைப் பாராட்டினர். அவர் தம் பாராட்டுரையில் உண்மையும் உத்தமமுமான ஊழியனும், கல்லூரியை அழகுபடுத்துவதில் அவருக்கிருந்த கரிசனையையும், தோட்ட வேலையில் அவருக்கிருந்த சித்தியையும், (பட்ட மரத்தையும் தளிர்க்கப் பண்ணும் இயல்புடையரெனப் பேர மகள் புலம்பினர். ) பாடசாலையிலும், மிஷனரிமாரிலு மிருந்த பற்றையும், ஆண்டவரிடத்துள்ள விசுவாசத்தையும், அமைதி, அன்பு ஆகியவற்றையுங் குறிப்பிட்டனர்.

மறைத்திரு ஜெயசிங்கம் அவர்களால் உடுவிலில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

இவரது பிரிவால் துயருறும் அனைவரையும் ஆண்டவர்தாமே தேற்றுவாராக.

○

முருகுப்பிள்ளை ஜேம்ஸ் நாகலிங்கம்

புங்குடுதீவு அ மி. பாடசாலைத் தலைமையாசிரியரா யிருந்து இளைப்பாறிய திரு. எம். ஜே. நாகலிங்கம் அவர்கள் 27-8-68 ல் தமது 67 ஆம் வயதில் மறுமைக்குள் பிரவேசித்தனர், இவர் அல்வாயைச்சேர்ந்தவரும், புங்குடுதீவு காலஞ்சென்ற திரு. இராமநாதன் அவர்களது மருகனும், யாழ்ப்பாணம் தூய குடும்ப கொன்வென்ற் ஆசிரியையான திருமதி சற்குணம் நாகலிங்கத்தின் அன்புக் கணவருமாவர்.

மறுநாள் மாலை 5 மணிக்கு யாழ். 3 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள அவரது இல்லத்தில் மறைத்திரு. சாம் அல்விறெட் அவர்களால் மறைத்திரு என். கதிரவேலு, திரு. எஸ். என். சுகுணநந்தன் ஆகியோரின் உதவியுடன் நடத்தப்பட்ட சேமாராதனையில் மறைத்திரு. எஸ் ரீ. ஆசீர்வாதம் அருளுரை வழங்கினர். மறைத்திரு. ஜே. ஜே. இரத்தினராசா தம் பாராட்டுரையில் ஆசிரியரது அன்பு, ஆதரவு, சுற்றந் தழுவுதல், பரோபகாரம், சபைக்கரிசனை ஆகியவற்றைக் குறிப்பிட்டனர். கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் மறைத்திருவாளர்கள் அல்விறெட், இரத்தினராசா ஆகியோரால் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

இவரது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், (திருமதி பத்மராணிபரராசசிங்கம், பத்மபாலன், பத்மசீலன், சற்குணலிங்கம், விமலலோசனி, ரதி, காந்தி, நாதன், ராஜினி) சகோதரி (திருமதி பூதத்தம்பி, சாவகச்சேரி) ஏராளமான சுற்றமித்திரருக்குத் தேவ தேற்றரவு கிட்டுவதாக.

## சபை நிகழ்ச்சிகள்

வட்டுக்கோட்டையில்

கடந்த ஞாயிறு மாலை வட்டுக்கோட்டை அத்தியட்சாசன ஆலயத்தில் வட்டுக்கோட்டை, அராலி, மூளாய், பண்டத்தரிப்புச் சபைகள் சேர்ந்து இசையாராதனை நடத்தினர். மறைத்திரு. கே. ஜே. மில்ஸ் அவர்களால் நடத்தப்பட்ட இவ்வாராதனையில் மேற்படி சபைகள் சிறப்புப் பாட்டுகள் பாடினர். போதகரின் அருளுரையும் அத்தியட்சரின் ஆசீர்வாதமும் இடம் பெற்றன.

ஆண்டவனைச் சொல்லாலும் செயலாலும் பொருளாலும் அகமார அஞ்சலிசெய்து ஆனந்தங் காண்பரடியார். இசையுடன் பாடிப் போற்றுவதில் தனியின்பங் காண்பர் பக்தர். இசையுடன் இறைவன் புகழ்பாடித் துதித்தின்புறும் பழக்கம் நம் ஆராதனைகளிலெல்லாம் பெருமளவு இடம்பெற வாய்ப்புக் கிடைக்கின் நன்மையாகும்.

இவ்வாராதனை நடைபெறக் காரணரா யிருந்தவர்களுக்கு நம் பாராட்டு.

## பிரிவுபசாரங் கூறினர்

கடந்த பல ஆண்டுகளாய் தெ. இ. ச., யாழ்ப்பாண அத்தியட்சாதீன ஊழியனாகப் பணி புரிந்தவரும், கடந்த ஓராண்டுக்கு மேல் உடுப்பிட்டித் திருச்சபை ஊழியனாயிருந்தவருமான மறைத்திரு. ஜே. என். சாமூவேல் அவர்கள் முகத்துவாரம் அங்கிலிக்க சபைக்கு செப்டம்பர் முதலாந் திகதி தொடக்கம் ஊழியனாகச் செல்வதை முன்னிட்டு அவருக்கும் பாரியாருக்கும் உடுப்பிட்டிச் சபையார் சபாமண்டபத்தில் 28-8-68 புதன்கிழமை காலை பிரிவுபசாரம் நடத்தினர். பொலிகண்டி அ மி. பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. கே. ஆறுமுகம் வைபவத்துக்குத் தலைமை தாங்கினர்.

சிற்றுண்டி உபசரணையின் பின் தலைவரின் வேதவாசிப்பும் மறைத்திரு. ஜே. எம். சிங்கராயகத்தின் செபமும் இடம்பெற்றன. தலைவர் தம் முன்னுரையில் தாம் வாசித்த வேதபாகமாகிய 1தீமோ. 8 : 1—7ஐ ஆதாரமாகக் கொண்டு போதகரின் நல்லிலட்சணங்களைப் பாராட்டினர், அடுத்து சபையின் பேரில் திரு. எஸ். ஆர். சௌரத்தினமும், ஸ்திரிகள்சங்கச் சார்பில் திருமதி பீ. இரத்தினசிங்கமும், வாலிபர் சங்கச் சார்பில் திரு. வீ. தர்மகுலசிங்கமும், வரணிச் சபை பேரில் திரு. ஜே ஆர். இராசரத்தினமும், குடத்தனைச் சபைபேரில் திரு. ஏ. வீ. பொன்னுவும் பாராட்டுரைகள் வழங்கிய போது போதகரது ஆடம்பரமற்ற வாழ்க்கை, சாதனையோடமைந்த போதனை, வாலிபர் சிறுவர்களைக் கவரும் இயல்பு, அன்பின் தன்மை, அம்மாளின் பக்தியான செபவாழ்வு ஆகியவைகளைக் குறிப்பிட்டனர்.

சபையார் சார்பில் திரு. கே. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் போதகருக்கும் அம்மாளுக்கும ஒரு மின்சார மேசைவிளக்கு, ஒரு தோற்பெட்டி, ஒரு அலாம் கடிகாரம் ஆகியவற்றை அன்பளிப்புச் செய்தனர்.

போதகரும் அம்மாளும் தனித்தனியே நன்றி தெரிவித்தனர், தாம் என்றும் எந்நேரமும் உடுப்பிட்டிச் சபையை நினைக்கும்படி அவர்களது அன்பும் அன்பளிப்பும் செய்துள்ளன வென்றும், நல்ல மேய்ப்பன் ஒருவர் சபைக்குக் கிடைக்க வேண்டுமென்றுங் குறிப்பிட்டனர்.

சபைச் செயலாளன் திரு. கொலின் இரத்தினசிங்கம் வைபவம் இனிது நடைபெற உதவியவர்களுக்கு நன்றிகூறினர்.

சாமுவேல் போதகரின் செப ஆசீர்வாதத்துடன் வைபவம் முடிவுற்றது.

## பௌர்ணமி நாள் கலை விழா

(6-9-68) வெள்ளிக்கிழமை மாலை 6. 30 தொடக்கம் யாழ் திறந்த வெளியரங்கில் நடக்க விருக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பௌர்ணமிதோறும் நடத்திவரும் கலைவிழாவில், கல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 'நானும் பெண்தான்' என்னும் சமூக நாடகமும், வனர் ... 'நித்த ...

## ஆச்சிரமத்தில் ஐந்தாண்டுகள்

''கிரான்ஜீவன்''

மட்டக்களப்பைச் சேர்ந்த கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம், எதிர்வரும் செப்டம்பர் 5, 6 ஆம் திகதிகளில் தனது பத்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாட எத்தனித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஐந்து ஆண்டு காலம் அங்கே மாணவனாக இருந்த நானும் அதைப்பற்றி எழுதலாம் என எண்ணியே இக்கட்டுரையை வரைகிறேன்.

1961 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி பெட்டியும், படுக்கையுமாய் நான் வந்து இறங்கினேன் ஆச்சிரமத்து வாசலில். புது இடம், புது சூழ்நிலை, புதுமுகங்கள். இவைகளை எதிர் கொள்ள சந்தோஷமாயிருந்தாலும் மற்றப் பக்கமோ கிராமமான ஊர், அறிமுகமில்லாதவர்கள். (சின்னண்ணனைத் தவிர) ஆச்சிரமம் என்ன மாதிரி இயக்கமுடையதாயிருக்குமோ என்ற எண்ணம் ஒரு ஏக்கத்தை ஏற்படுத்தியது.

சின்னண்ணன் வந்து என்னைக் கூட்டிக்கொண்டு போய்ச்சேர்ந்து கொஞ்ச உரையாடலின் பின் "சாது சுந்தர்சிங்" மடத்தில் ஒரு அறையைத் தந்து அம்மடத்தை என்னை கிரவிக்கும்படி கூறினார். சிறிது நேரத்தில் ஜெபக் கூட்டம் நடந்தது; வணக்க முறையும் புதியதாக இருந்தது. (ஏனெனில் சபையின் ஆலய வழிபாட்டு முறைக்கும் ஆச்சிரம ஆலய வழிபாட்டு முறைக்கும் மட்டக்களப்பில் கிரம்ப வித்தியாசமுண்டு) அவ்வேளையில் ஆச்சிரமத்தில் நானும் சின்னண்ணனும் சகோதரன் சுந்தரராசாவுமே இருந்தோம்.

ஒருநாள் கழிந்து இன்னுமொரு புதிய நாளும் ஆரம்பமாகிவிட்டது, என் வாழ்விலும் ஒரு புதிய அத்தியாயம் உருவான ஆரம்ப நாளும் ஆயிற்று. ஏனென்றால் மட்டக்களப்பில் படித்த பாடசாலையிலிருந்து விலகி, படிக்க முடியாதென்று என் மனம்போன போக்கிலே இருந்த எனது வாழ்வு ஆச்சிரம வாழ்வோடு இணையுமென்று நான் என்றுமே எண்ணியதில்லை. அதனாலே கிரானின் பாடசாலையிலே சின்னண்ணனால் சேர்க்கப்பட்டேன். அன்று ஆசிரியர்களும் மாணவர்களும் என்னைக் கேட்ட கேள்வி? நீ சின்னண்ணனின் மகனா? தம்பியா என்பதே. அன்று பின்னேரம் ஆச்சிரமத்துக்கு வந்தபோது கதிரேசண்ணனையும் (ஜெபரெட்னம்) ஆச்சிரமத்தின் அங்கமனைவரையும் கண்டு கொண்டேன் அவ்வாறு இறுதியிலே நல் அண்ணனையும் (Good Child) பிள்ளைகளையும் ஜோதி நிலையத்திலிருந்து வரக்கண்டு (கிரான் ஆச்சிரமத்துக்கு முதல் தொடங்கப்பட்ட ஆச்சிரமம் கிரானிலிருந்து சுமார் பதினொரு மைல்களுக்கப்பால் இன்று ஊழியக்காரரில்லாமலிருந்தாலும் அது ஜோதி நிலையமாகவே இருக்கிறது) எங்கள் குடும்பம் (ஆச்சிரம்) பெரிதென்பதைக் கண்டு கொண்டேன்.

காலமும் ஓடிக்கொண்டேயிருந்தது. சின்னண்ணனும், கவிசேட சுற்றுலா வைத் தொடங்கிவிட்டார். சின்னண்ணன் இல்லாமை எனக்கு ஏதோ குறைவுள்ளது போலவே இருந்தது. ஆனாலும் ஆச்சிரமச் சகோதரர்களின் அன்பு என்னைத் தாங்கிக்கொண்டது. இந்த வேளையில் நான் எனதுவீட்டுக்கு (கல்முனைக்குப்) போனேன். அங்கே என்னைக் கண்டதும் எனது அம்மம்மா என்னைக் கட்டி அழுதார்கள், ஏன் தெரியுமா? நான் வீட்டிலிருந்தபோது எப்போதும் சினிமாவுக்குப் போவதால், இதை நான் மறக்கவேண்டுமென்பதற்காக "யாழ்ப்பாண ஆச்சிரமத்தில் பெரியண்ணன் ஒருவர் இருக்கிறார் அவர் படம் பார்க்கும் பிள்ளைகளுக்கு அடிப்பார் மரக்கறியும் சோறுந்தான் சாப்பாடு, வெளியே போக விடமாட்டார்கள்" என்று என் அம்மா என்னைப் பயமுறுத்தியதாகச் சொல்வார்கள். இதை எண்ணியே என்னைக் கண்டதும் அழத் தொடங்கி விட்டார்கள். நானோ அங்குள்ள ஒழுங்கு முறையைச் சொல்லி நான் எவ்வளவோ சந்தோஷமாக இருக்கிறேனென்ற பொழுது அவர்களும் சந்தோஷப்பட்டார்கள்.

சின்னண்ணன் இந்தியாவிலிருந்து வந்ததும் பெரியண்ணனும் கிரானுக்கு வந்திருந்தார். அப்போது நான் மனம் விட்டுப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. 'இது உனது வீடென்று எண்ணிக்கொள்' என்று பெரியண்ணன் அப்போதே என்னிடம் சொன்னார். இலகுவில் எவரையும் கவரும் தன்மையும், குழந்தை உள்ளமும் கொண்டவராகப் பெரியண்ணன் எனக்கு விளங்கினார். சின்னண்ணன் சிங்கப்பூர், மலேயா முதலிய இடங்களுக்குப் போனபோது; என்னைப் பற்றி, கால் அண்ணன், கதிரேசண்ணன் ஆகியவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டே இருப்பார். இந்த வேளையில் இன்னும் அவரது அன்பை உணரக் கூடியதாயிருந்தது. இந்த இடைக்காலத்தில் சாம அண்ணனும் இங்கு வந்திருந்தார். அவரைப் பற்றி மாணவர்கள் பலர் சொல்லக் கேட்டிருந்தாலும், அவரை நேரில் பார்த்த பொழுது பொலிசில் இருக்க வேண்டியவர் மறந்து இங்கே வந்துவிட்டாரென்றே எண்ணினேன். ஆனால் இன்றோ அப்படியும் ஒருவர் ஆச்சிரமத்துக்கு வேண்டுமென எண்ணுகிறேன்.

1963 ஆம் ஆண்டு சின்னண்ணனின் உதவியுடன் உதயதாரகையில் "அன்பு" என்ற விடயத்தின் மூலம் எழுத்துலகில் பிரவேசித்தேன், 1964 ஆம் ஆண்டில் மருதமுனை ஆச்சிரமத்துக்கு வந்து சுமார் ஆறு மாதகாலம் மிகுந்து இருக்கும் போது ஒய்யூராட் பாடசாலை, ஜெபக் கூட்டங்கள் நடத்தும் முறைகளில் பயிற்சி பெற்றதுடன், பலரைச் சந்திக்கவும், அதில் சிலரை நண்பராகப் பெறவும் வழிகிடைத்தது. பின் ஆச்சிரம நிர்வாகத்தின்கீழ் அதன் துணையுடன் மட்டக்களப்பிலுள்ள கருவன்கேணி என்னும் கிராமத்தின் சபை ஊழியத்தைப் பொறுப்பேற்றேன். பெரும் போராட்டத்துக்கிடையே இவ்வூழியம் முடிந்ததும், திரும்பவும் ஆச்சிரமத்துக்கு வந்து சில தினங்களில் யாழ்ப்பாணத்து கல்லூரியிலுள்ள சாமுவேல் அச்சகத்தில் வேலை செய்து தற்போது சுவதீயனத்தில் உழைத்து ஊழியம் செய்கிறேன்.

நான் இன்று எத்தனையோ பேருக்குத் தெரிந்த சகோதரனாய் இருக்கிறேனென்றால் அது ஆச்சிரமத்தால் செய்தது. நான் பிரசங்கம் செய்வது சின்னண்ணனைப்போலென்று நண்பர்கள் சொல்லுகிறார்களென்றால் அது ஆச்சிரமத்துக்கூடாகக் கடவுள் தந்ததாகும். நான் ஆச்சிரமத்துக்கு வந்ததால்தான் எனது ஓய்வு நேரங்களைக் கதை, கட்டுரை கவிதை எழுதுவதில் செலவிடக்கூடியதாயுள்ளது.

ஆச்சிரமத்திலிருந்து வெளியேறிய என்னைப்போல் எத்தனை எத்தனையோ மாணவர்கள் வாழ்வின் ஒளியைக்காணக் கூடியதாயுள்ளது என்றால், அது ஆச்சிரமத்தின் பெரிய சேவையல்லவா? வாழ்வில் ஒருவர் எப்படி எத்தனைக்கு தேவையாகிறார் என்பதைக் கண்டுபிடிப்பது சிரமம். அதிலும் ஆச்சிரம வாசிகள் விஷயத்தில் இது எவ்வளவு கடினமாக இருக்குமென்று சொல்லத்தேவையில்லை. சின்னண்ணனுடைய தந்தை இறந்த அடுத்தநாள் (கவாலியில்) நானும் மாணவர்கள் சிலரும் போயிருந்தோம். அங்கே இருந்த ஒருவர் என்னை இந்தப் பையன் யார்? என்று வினவியபோது "நான் பெறாமல் பெற்றெடுத்த மகன்" என்று சின்னண்ணன் சொன்னார். அது எந்த நிலையிலும் அழிக்க முடியாத ஒரு அன்புப் பிணைப்பாகவும், தந்தை இல்லாத எனக்கு ஒரு தந்தை கிடைத்ததாகவும் நான் பெருமையடைகிறேன். இன்றும் பெருமையடைகிறேனென்றும், நான் ஒரு தீமோத்தேயுவாய் இல்லாவிட்டாலும், தீமோத்தேயுவுக்கு ஒரு பவுலைப்போல ஒருவன் கிடைத்ததுபோல எனக்கு ஒரு சின்னண்ணன் கிடைத்ததே. என்னைப்போல எத்தனையோ பேர் ஆச்சிரமத்தையும், அதின் தலைவர்களையும், தங்கள் வழிகாட்டிகளாக, தலைவர்களாக, பிரச்சினைகளில் தீர்வு காண்பவர்களாகக் கொண்டுள்ளார்கள் என்றால் அது ஆச்சிரமத்துப் பெருமையும் ஆண்டவருக்கு மகிமையுமல்லவா,

ஆச்சிரமம் அமைதியான சூழ்நிலை, பரந்த மணல்பாங்கு; தம்பணி செய்யும் ஊழியர்குழாம், கண்டவரைக்கவரும் கட்டிடம் (நமது நாட்டு முறையில் உருவாகியது) இப்படியான ஒரு தோற்றத்தை கொண்டுள்ளது.

இன்றைக்கு ஆச்சிரம இயக்கம் இலங்கை முழுவதும் மாத்திரமல்ல உலகத்திற்கே தேவை என்பதை நாம் உணரக்கூடியதாயிருக்கிறது. ஏனென்றால், தங்களுக்கு அமைதி இல்லை என ஏங்கும் அயல் நாட்டுக்காரர் (மேல்நாட்டார்) அமைதியைப் பெற இந்தியாவிலுள்ள ஆச்சிரமங்களுக்குத் திரண்டு வருகிறார்களென்றால் ஆச்சிரமத்தின் தேவை இன்றைய உலகுக்கு எவ்வளவு என்பது புரிகிறதல்லவா? வெயிலில் நடப்பவர்களுக்கு மரநிழல் ஆறுதல் கொடுப்பதுபோல, உலகியல் வெயிலில் அவதியுறுபவர்களுக்கு ஆச்சிரமம் ஒரு நிழலாயிருக்குமென நினைக்கிறேன். இன்று ஆச்சிரமத்துக்கும் வாலிபர்களுக்கும் உள்ள இடைவெளி பெரிதாகிக் கொண்டே போகிறதை நான் காண்கிறேன். ஏனென்றால் உலகியல் கவர்ச்சியே மூலகாரணம்,

வாலிபர்களே! தேன் இனிக்குமெனச் சொன்னால் தெரியாது. அதைச் சுவைக்கத்தக்கபோதுதான் அதன் உண்மையான உருசியை அறிய முடியும். அதேபோல், ஞானிகளால், தவமேதைகளால், அடியார்களின் அடியார்களால் பாதுகாக்கப்பட்டு, போற்றப்பட்டுவரும் இவ்வாச்சிரம இயக்கத்தை நீங்களும் உருசித்துப் பாருங்கள். அப்போதுதான் நான் பெற்ற இன்பம் நீங்களும் பெறுவீர்களென நம்புகிறேன்.

## கோட்டைக் கூட்ட நினைவுகள்

மறைத்திரு. ஜே. ஜே. இரத்தினராசா

ஆகஸ்ட் மாதம் 13 ஆம் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் கோட்டைத் தேவாலயத்தில் நடந்த விசேஷ கூட்டங்கள் நம்மிற் பலர் சிறுவர் சிறுமிகளாயிருந்த காலத்தில் நடந்த 'கொன்வென்ஷன்' கூட்டங்களின் நினைவுகளைக் கிளப்பின. இத்தேவாலயத்தில் அன்று, டச்சுக்காலத்திலும், பின்னர் ஆங்கிலேயர் காலத்திலுங்கூட அழகுடன் ஜொலித்துக் கொண்டிருந்த தளபாடங்கள் சில பழைய உருவம் திருப்பி அமைக்கப்பட்டுக் காட்சியளித்தமை பழைய கொன்வென்ஷன் கூட்ட நினைவுகளைத் தான் தந்து கொண்டிருந்தது. கிறிஸ்தவ வட்டாரங்களிலே பிரத்தியேகமாகவும், சிறப்பாகவும் மக்கள் சாயந்தரக் கூட்டங்களுக்கு மட்டுமே மோட்டார் வாகனங்களில் வேகமாய் ஓடி வந்து, அதேவேகத்துடன் திரும்பி ஓடும் இக்காலத்தில் ; வெண்ணிற ஆடையைத் தூய்மைக்கடையாளமாய் உடுத்தும், அதையும் மிக எடுப்பாக உடுத்தும் இக்காலத்தில், இம்மூன்று நாட்களும் பல மக்கள் எளிமையான உடை நடையுடன் முழுநாளும் நடந்த கூட்டங்களிற் சமுகமளித்து, கூடி ஆராதித்து, தனிமையில் தியானித்துப் போவதைப் பார்த்தது பழைய கோட்டைக்கூட்ட நினைவுகளை அப்படியே உருப்படுத்தினது. பழைய காலங்களில் பொப்லி ஐயர், ஸ்டான்லியோன்ஸ், வேதநாயகசாஸ்திரியார், ஆனல்ட், அமரசிங்கம் ஆகியோர் நின்று பேச்சு முழங்கிய அதே பீடத்தில் கிறிஸ்ற்றி அரங்கநாதனும், சாம் ஜெமிங்டனும் நின்று பிரசங்கித்த காட்சி பழைய காலங்களை நினைவுபடுத்தியது.

இம்முறை நிகழ்ச்சிகள் பெருமளவில் அனைத்துலக திருச்சபையின் ஏகத்துவ இயக்க மயமாய் இருந்தது குறிப்பிடக் கூடியது. அண்மையில் சுவீடன் நகராகிய உப்சலாவிலுள்ள ஒரு பழைய பரம்பரை அத்தியட்ச ஆசன ஆலயத்தில் நடந்த அனைத்துலக ... சபைகள் மகாசபையின் ... அக்கிராசனரில் ஒருவராகத் தெரியப்பெற்ற மறைத்திரு கலாநிதி டி. சி. நயில்ஸ் அவர்கள் ஒரு நாள் விரிவுரையாற்றி, அடுத்த நாள் மேற்படி சமாசத்தின் ஆரம்ப ஆராதனையின் ஒலிப்பதிவைத் திருப்பி ஒலித்துக் காட்டினர். இந்திய வேதாகம சங்கத்தின் மொழியாக்கச் செயலாளர் மறைத்திரு. கிறிஸ்ற்றி அரங்காதன் " இது கடவுளுடைய உலகம் " " இது நமது உலகம் " என்ற தொடரில் செய்த பிரசங்கங்கள் அனைத்துலக சிந்தனையை ஊட்டின.

கூட்டங்களின் இறுதி நாள் பிற்பகல் அக்கிராசனர் திரு. ஜே. சி. ஹன்டி அவர்களின் தலைமையில் நடந்த பகிரங்கக் கூட்டத்தில் யாழ்ப்பாண ஐக்கிய சங்கத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவு சம்பந்தமாக இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ஏ. பி. எஸ். என். பிள்ளைநாயகம் வாழ்த்துரை கூறியதும், மறைத்திரு. அரங்காதன், மகாகனம் குலேந்திரன் ஆகியோர் சங்கத்தின் வேலையைப் பரந்த திருச்சபை நோக்கத்துடன் இணைத்துக் கணிப்புரை கூறியது இந்த நிகழ்ச்சிக்கு உயர்தர நிலையையும், அவையோருக்கு ஆழ்ந்த சுடுபாட்டுக்குரிய சிந்தனையையும் அளித்தது. சங்கத்தின் நோக்கங்களையும், செயல்களையும் ஆரம்பம் தொட்டுச் சரித்திர வழியிலும், ஹாசிய முறையிலும் எடுத்துக் கூறிய அத்தியட்ச பெரியார் சங்கத்துக்குச் சரமகவி பாடியது போல், ஏறத்தாழ ஆறு, ஏழு ஆண்டுகளுக்குள் நேரிடுமென எதிர்பார்க்கப்படும், இலங்கைச் சபை ஐக்கியம் நிறைவாகும் பொழுது இந்த ஐக்கிய சங்கத்துக்கு மிராதெனக்கூறியது 'மணக் கோலத்தைப் பிணக் கோலம்' ஆக்கியதுபோல் தெரிந்தது. பல வாண்டுகளாகப் பிரிந்திருந்த சபைகள் ஒன்றுகூடி வரும் பொழுதும் அவறறைச் சாதனை வழியில் பழக்கி நடத்துவதற்கு, ஒவ்வொரு சபைப் பிரிவுகளிலும் இன்றுமட்டும் சங்கங்கள் இருந்தியக்குவதுபோல, ஐக்கியப்பட்ட ஒரே சபைக்குள்ளும் கிறிஸ்தவ ஐக்கிய சங்கம்போன்ற தாபனங்களும் இருந்தியக்குவது அவசியம் தேவைப்படும்.

விடுமுறை அல்லாத தினங்களில் காலைக் கூட்டங்களுக்குப் பலர் சமுகமளிப்பது முடியாத காரியம். இருந்தும் காலை நற்கருணை ஆராதனைகளிலும், இரு மறை விளக்கக் கூட்டங்களிலும் கிடாயமான அளவுக்கு வரவு காணப்பட்டது. சாயந்தரக் கூட்டங்களில் தாராளமான வரவு கண்டது உற்சாகத்துக்குரியதே. மாலைக்கூட்டங்களில் கோட்டை ஆலயம் ஏறத்தாழ நிரம்பியிருந்த காட்சியும், பல சபைகளிலும் இருந்து கூட்டப்பட்டு அணி வகுத்திருந்த பாடகர் குழாம் குரலும் வாத்தியமும் சேர்ந்திசைத்த ஒலி ஆலயத்தை நிரப்பியதும் கோட்டை ஆயத்தில் பல்லாண்டுகளுக்கு முன் நடந்து வந்த எழுப்புதற் கூட்டங்கள் பற்றிய பழைய நினைவுகளைக் கிளப்பிக் கொண்டேயிருந்தன.

கூட்டங்களுக்காக ஆலயத்துக்குள் 500 நாற்காலிகள் வைக்கப் பட்டிருந்தன. எந்தக் கூட்டத்திலும பெண்மணிகளே அதிகப்படியாய் இருந்தனர். ஆனால் ஒரு கூட்டத்திலும் ஆசனங்கள் ஒன்றும் தவறாது நிரப்பப்படவில்லை. வரவு இன்னும் கூடியிருக்கலாம். கிறிஸ்ற்றி அரங்காதன் குறிப்பிட்டபடி வாலிபப் பராயத்தினர் கூட்டங்களில் மிகக்குறைவாயிருந்தனர். வளர்ந்தோர் சிலர் இரண்டொரு கூட்டங்களுக்கு மாத்திரம் இடையிடையே முகம் காட்டி நிகழ்ச்சிகளின் தரத்தைக் கணிக்க வருவதுபோல் தோன்றி மறைந்தமை சபைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிபற்றியவொரு நல்ல குறியல்ல. இம்முறை வாலிபருக்கான விசேஷ கூட்டங்கள், கருத்தரங்கு நிகழ்ச்சிகள் முதலியன ஒழுங்கு செய்யப்படாதது ஒரு பெரும் குறையே. கிறிஸ்ற்றி அரங்காதன் அவர்கள் நிகழ்ச்சிகளின் அமைப்பாளர்களுள் ஒருவருடன் கூறியதுபோல, வாலிபப் பராயத்தினருடன், அவர்களுடைய சிந்தனை உலகில் அவர்களுக்கேற்ற அலை வரிசையில் சபை பேசவேண்டியது இன்றைய உலகில் மிக அவசியம். வாலிபப் பராயத்தினருடன மாத்திரமல்ல, வளர்ந்தவர்களுடனும் கிறிஸ்தவ சபை இன்று இவ்வகையில்தான் பேசவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயதாரகை
UTHAYATHARAKAI

1968 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மீ 30 ஆம் நாள்

## அத்தியட்சாதீனத்துக்கு ?

நமது அத்தியட்சாதீனம் உருவாகி ஆண்டுகள் இருபத்தொன்று கின்றன. உலக கிறிஸ்தவ சமுதாயத்தின் கவனத்தைப் பெற்ற தென் இந்திய திருச்சபையின் அங்கமாகிய இது பல துறைகளில் முன்னேறியுள்ள தெனலாம். தனித்தனி கிராம சபைகளாய், தம்தம் விருப்பில் இயங்கி வந்தவர்கள் ஒரு குடும்பமாக ஒரு தலைமையின் கீழியங்கி நன்மை யடைய வழி வகுத்துள்ளது. உலக திருச்சபையில் நாம் பங்காகி கிறிஸ்தவ சாட்சி நம் நாட்டில் மங்காதிருக்கும் எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது.

அதன் பெருமை காப்பது சபையார் கடமை. சபையார் தம் வணக்கத்தைச் சரிவரச் செய்து வருவதில் அதன் சிறப்புத் தங்கியுள்ளது. வணக்கம் உளத்தால் மாத்திரம் செய்யப்படும் ஒன்றல்ல. உடல், பொருள், ஆவி மூன்றினாலும் செலுத்தப்படும் நன்றியுணர்வே சிறந்த வணக்கம். இதனாலேதான் திருத்தொண்டும், பலிகளும், தொழுகையும் ஆலயங்களெங்கும் இடம் பெறுகின்றன. எனவே நாம் ஆண்டவனை மனமார நாவாரல் போற்றுவது மாத்திரம் தொழுகையாக நின்றுவிடாது காணிக்கைகளும் திருத்தொண்டுகளும் சேர்ந்தாக வேண்டும்.

நாம் ஆலயங்களில் காணிக்கை செலுத்துகிறோம். தவறாது மாதாந்தக் கொடைகளைக் கொடுக்கிறோம். சிறப்புக் காணிக்கைகளும் செலுத்தி வருகிறோம். அத்தனையும் நம் வணக்க முறையன்றி வேறல்ல. அவற்றோடு நற்செய்திப்பணி மருத்துவப் பணி, வித்துவப்பணி, சமூகப்பணி முதலிய திருத்தொண்டுகளும் புரிகிறோம். இவையும் வணக்கத்தின் பாகங்களே.

இவற்றோடு நின்றுவிட்டால் அத்தியட்சாதீனம் சிறக்குமெனச் சொல்வதற்கில்லை. அத்தியட்சாதீனம் சிறக்கவில்லையென்றால் நாமும் சிறந்த நிலையில் இல்லையென்பதே பொருள். அத்தியட்சாதீனத்துக் கடமைகள் ஒழுங்காய் நடைபெறுவதற்கு வருடாவருடம் ஒன்றேகால்லட்ச ரூபாவுக்குமேல் தேவைப்படுவதாய் கூறப்படுகிறது. ஊழியர் வேதனத்துக்கு மாத்திரம் ரூபா 100,000—00 தேவைப் படுகிறது. இதில் சபைகளின் கோட்டாவாகக் கிடைப்பது 71000-00 ரூபா எனக் காணலாம். மீதித் தொகையை ஈடுசெய்ய அத்தியட்சாதீனம் வேறு உதவிகளை நாடுகிறது. அவற்றில் ஒன்றுதான் அத்தியட்சாதீன வருடாந்த தோத்திரக் காணிக்கையாகச் சபையாரிடமிருந்து எதிர் பார்க்கும் நன்கொடை. இதன் மூலம் அத்தியட்சாதீனம் வருடத்தில் ரூபா 12000 வரை எதிர் பார்த்து நிற்கிறது. கடந்த சில ஆண்டுகளாக இத்தொகை கிட்டவில்லையெனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. சபைகள் செலுத்திவரும் கோட்டா கூடியுள்ளது. ஆனால் செலவைச் சரிபண்ணத் தோத்திர காணிக்கையும் கூடுவது அவசியம். ஒரு இலட்ச ரூபாவில்—ஊழியர் தாபரிப்பில் — சபையார் பங்கு எண்பது வீதமாயாவது இருக்கச் சபையார் தம் தோத்திர காணிக்கை செலுத்துவதில் உற்சாகமா யிருப்பது நன்றல்லவா? புறதர்மங்களை, வெளியூர்த் தயவை, எப்போதும் எதிர் பார்க்க முடியாது; எதிர் பார்க்கவுங் கூடாது. நாம் நமது அத்தியட்சாதீன வேலைகளை நடப்பிப்பவர்களாய், நமது ஊழியர்களைத் தாங்குகிறவர்களாய் இருக்கத்தக்க அளவில் கடவுள் நம்மை ஆசீர்வதித்துள்ளார். நன்றியுணர்வோடு இவ்வாண்டு நம் நன்றிக் காணிக்கைகளை அத்தியட்சாதீனத்துக்கு விசனமாயல்ல உற்சாகமாய்க் கொடுத்து நம் கடமை நிறைவுற வகை செய்வோமாக. அந்த ஆவி நம்மை ஏவச் செபித்து வருவோமாக.

## மக்களை மயக்கவா மார்க்கம் ?

திரு. A. இராமநாதன் அவர்கள் வின்னெனியில் எழுதியவை

ஞாயிறு காலை அல்லது மாலை தேவாலயத்துக்குச் செல்கிறோம். அங்கு சில பாட்டுக்களைப் பாடி, போதகர் செய்யும் செபங்களையும் பிரசங்கத்தையும் கேட்கிறோம். எங்கள் உள்ளத்தில் ஒரு தற்காலிக எழுச்சியும், திருப்தியும் உண்டாகிறது. ஆராதனை முடிந்து ஆலயத்துக்கு வெளியே வந்ததும், "இன்று போதகருடைய பிரசங்கம் நன்றாக இருந்தது; ஆராதனையும் சிறப்பாய் இருந்தது" என்று எமது நண்பர்களுக்குக் கூறி நாம் செல்லவேண்டிய இடங்களுக்குச் சென்று விடுகிறோம். மனதில் ஒரு திருப்தி; அவ்வளவுதான். இந்தத் திருப்தியை ஆழ்ந்து ஆராய்வோமானால் அது ஒரு போலித் திருப்தி என்பதை உணருவோம். இத்தகைய திருப்தியைக் குறித்தே கார்ல்மாக்ஸ் (Karl Marx) என்பவர், "மார்க்கம் பொது மக்களுக்கு ஒப்பியம் போன்றது." என்று கூறினர். இக்கூற்றை முழுமையாக நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அதில் ஓர் அளவுக்கு உண்மையிருக்கின்றதென்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

மக்களின் மார்க்க நாட்டத்திற்கு மார்க்சிய வாதிகள் வழக்கமாக இரண்டு நியாயங்கள் கூறுவார்கள். ஒன்று மனித உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் பயம்; மற்றது சில மார்க்க குரவர்களால் போதிக்கப்படும் தப்பிதமான போதனை. அப்போதனையாவது: இந்த உலகில் ஒருவன் வறியவனாயிருந்தாலும் அவன் கடவுளை வழிபடுவானாகில் அவன் மோட்சத்தில் தான் இழந்த இன்பங்களையெல்லாம் பெறுவான். எனவே இந்த உலகில் நாம் வறியவர், பணக்காரர் என்ற வேற்றுமையைக் கடவுளுடைய சித்தமென ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை நிவிர்த்தி செய்வதற்கு நாம் முயற்சி செய்யவேண்டியதில்லை.

முதல் நியாயத்தை எடுத்துக் கொள்வோம். "நான் இன்று கோவிலுக்குப் போகாவிட்டால் கடவுள் என்னைத் தண்டிப்பார். என் வேலையில் நான் முன்னேறுவதற்குத் தடைகள் ஏற்படும்" என்ற ஒரு பயம் நாங்கள் அறியாமலே எங்கள் அடிமனதில் குடிகொண்டிருக்கிறது. ஆனால் உண்மையில் இந்தப் பயத்துக்கு இடம் இல்லை. கடவுளே இல்லையென்று மறந்த, பணம், பதவி, அதிகாரம், சிற்றின்ப அனுபவம் என்னும் விக்கிரகங்களை வணங்கும் எத்தனையோ மக்கள் வாழ்க்கையின் உலகப் பிரகாரமாக முன்னேறிக்கொண்டே வருகிறார்கள் என்பதை நாம் அவதானிக்கிறோம். தன்னை ஆராதிக்காவிட்டால் கடவுள் எம்மைத் தண்டிப்பார் என்ற பயத்தினால் நாம் ஆலயத்துக்கு ஒழுங்காகப் போவோமானால் அது உண்மையான மார்க்கமல்ல. "பிதாவே, வாழ்க்கையில் உலகப்பிரகாரமான சித்தியைப் பெறுவதற்கு உம்மைத் தேடுவேனாயின், அச்சித்தியை நீர் எனக்குத் தரவேண்டாம். எனினும் உம்மை உமக்காகவே நாடுவேனாகில் என்னைக் கைவிட்டு விடாதேயும்" என்று புனிதன் அன்செல்ம் (St. Anselm) செபித்தார். இதுவே உண்மையான பக்தி.

கிறிஸ்து மார்க்கம் மக்களை மயக்கும் ஒரு மார்க்கமல்ல, அது உண்மையில் தூக்கும் மக்களை எழுப்பி விடும் மார்க்கமாக விளங்குகிறது. எம்மைப் பாவத்திலிருந்து மீட்ட இயேசு பெருமான் ஏதோ கனவு காண்பவராய் இவ்வுலகில் வாழவில்லை. எந்த நேரமும் தன் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவரா யிருந்தார்.' ஜான். சி. பென்னற்று (John. C. Bennet) என்பவர் தனது, "கிறிஸ்தவ பொருள் உண்மைக் கொள்கை" (Christian Realism) என்னும் நூலில் இந்த உண்மையை நன்கு விளக்கிக் காட்டுகிறார். கிறிஸ்து எம்மை இரட்சித்தது எம்மூலம் உலகை இரட்சிக்கவே என்பது தான் இந்த நூலின் முடிபு.

கிறிஸ்தவர்களாகிய நாம் தனி ஆட்களாகவும் திருச்சபையாகவும் ஒரு மகத்துவமான அழைப்பைப் பெற்றிருக்கிறோம். இயேசு பெருமான் தமது அன்பின் இராச்சியத்தை இவ்வுலகில் நிலைநாட்டுவதற்கு முதலில் பன்னிரு சீடர்களை அழைத்தார். அவர்கள் எல்லோரும் சாதாரண மக்களாயிருந்தார்கள். அவர்களைப் புனிதர்களாக்கி வல்லமையுடன் திரும்பவும் உலகத்துக்குள் அனுப் [illegible] தொண்டு [illegible]

ஐரோப்பியர்காலத் தமிழுலகின் தனிநாயகன்

## கால்டுவெல் அத்தியட்சர்

(சென்ற புதன்கிழமை (28—8—68) கால்டுவெல் ஐயரின் பிறந்த தினம் அன்றுரை நினைவுகூரும் வண்ணமாக இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.)

என். எஸ். என்.

தமிழ் இலக்கியப்பரப்பிலே பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகள் ஐரோப்பியர் காலம் எனப்படும் இக்காலப் பகுதியில் ஐரோப்பிய அதிகாரிகளும், மதத் தொண்டர்களும், சேனைத் தளபதிகளும் பெருந்தொகையினராகத் தமிழ்நாட்டிற்கு வந்தனர். இவர்களிற் சிலர் தமிழ் நாட்டவர்மீதும் அவர் தம் இலக்கியத்தின் மீதும் தணியாத காதல் கொண்டனர். போப்பையர் போன்ற அறிஞர்கள் திருக்குறள், நாலடியார் போன்ற அறநூற்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். வீரமாமுனிவர் போன்ற புலவர்கள் வாடாத பாமாலைபாடித் தமிழன்னைக்குச் சாத்தினர். கால்டுவெல் ஐயர் போன்ற மேதைகள் தமிழ் இலக்கணத்தை நன்கு கற்று அதன் பெருமையைப் பிறநாட்டவர் அறியச் செய்தனர்.

கால்டுவெல் ஐயர் 1814 ஆம் ஆண்டில் இங்கிலாந்திலே பிறந்தவர். எம்பெருமான் மீதுகொண்ட அன்பிலே சிறுவயதிலேயே தம்மைச் சமயத்தொண்டுக்கு அர்ப்பணித்துக் கொண்டார். இங்கிலாந்து திருச்சபையின் மிஷனரி சங்கத்தில் சேர்ந்து தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்தனர். தென்னகத்திலேயுள்ள திருநெல்வேலி கால்டுவெல் ஐயரின் பணியை வளர்த்தது. மதபோதகராக வந்த கால்டுவெல் தமிழ் அறிஞராக மாறினார். தமிழ் இலக்கணங்களையும் தக்க ஆசிரியர்களிடமிருந்து ஐயந்திரிபறக் கற்றார். தமிழ் நாட்டவரின் சரித்திரத்தைக் கருத்தூன்றிக் கற்றார். தமிழ் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து மேதாண்டவரின் அன்பினையும் இரட்சிப்பின் மகிமையையும் ஏழை மக்களுக்கு எடுத்து விளம்பினார். தென்னகத்து ஆங்கிலேய திருச்சபை வளர்வதற்குப் பலம் வாய்ந்த அடித்தளம் அமைத்த பெரியார்களில் கால்டுவெல் ஐயர் முதன்மையானவர். இவரின் சீரிய பணியை உணர்ந்த ஆங்கிலேய திருச்சபை இவரைத் திருநெல்வேலியின் அத்தியட்சகராக நியமித்தது. அப்பணியிலேயே இறுதிவரை உழைத்து மறைந்தார் கால்டுவெல்.

கால்டுவெல் ஐயரைத் தமிழ் மக்கள் என்றும் சிந்தையிலிருத்திப் போற்றுவதற்கு அவர் எழுதிய நூலே முக்கிய காரணம் ஆகும். இவர் எழுதிய நூல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்பது. (A Comparative Grammar of Dravidian Languages) இந்த நூலின் வாயிலாகக் கலாநிதி கால்டுவெல் ஒரு பெரிய உண்மையைத் தமிழ் நாட்டாருக்கும் உலகத்தாருக்கும் உணர்த்திப் போனார். தென்னகத்திலே வழங்கும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகளின் இலக்கணங்களை ஆராய்ந்த இவர் அவை ஒரு தாய் மொழியை அடிப்படையாகக் கொண்டு பிறந்திருக்க வேண்டுமென்றார். அத்தாய் மொழிக்குத் திராவிட மொழி என்று பெயரிடலாம் என்றார். திராவிடம் தெற்கு என்று பொருள்படும். திராவிடத்திலிருந்து பிறந்தமொழிகளைத் திராவிட மொழிகள் என்றார். வடக்கிலே ஆரியம் பலமொழிகளுக்கு அடிப்படையானது போல் தெற்கிலே திராவிடம் தாயாகின்ற பெருமையை முதன் முதலிலே உலகத்தாருக்கு உணர்த்தியவர் கால்டுவெல் அத்தியட்சர்.

இத்திராவிட மொழிகளிலே மிகப் பழமையானதும் தூய்மையானதும் தமிழ்மொழி என்பது இவர் நிலைநிறுத்திய இன்னொரு உண்மை. ஆரியத்தின் முண்டின்றித் தனித்து நிற்கும் ஆற்றலும் அதற்குண்டென்று கூறினார்.

கால்டுவெல் ஐயர் காட்டிய உண்மை இன்று எத்தனையோ மாற்றங்களுக்கு வழி வகுத்து விட்டது. கவி தாகூர், "பஞ்சாப் சிந்து குஜராத்த மராத்தா, திராவிட உத்சல வங்கா" என்று பாடினார். இது இன்று இந்தியரின் தேசிய கீதமாக ஒலிக்கின்றது. 'திராவிடர் முன்னேற்றக்கழகம்' என்னும் சீரிளமைத் திறன் கொண்ட கட்சி தென்னகத்திலே அமைக்கப்படுவதற்கு வழிவகுத்தவரும் கால்டுவெல் ஐயரே ஆவர்.

கால்டுவெல் ஐயர் எழுதிய இன்னொரு சிறப்பான நூல் திருநெல்வேலியின் சரித்திரம் என்பது. (A History of Tinnevely) இந்த நூலிலே ஆங்கிலேயரான கால்டுவெல் ஐயர் தம் நாட்டவரை எதிர்த்துப் போரிட்ட வீரபாண்டிய கட்டப் பொம்மனைப் பற்றியும் அவனுடைய ஆருயிர்த் தம்பி ஊமைத் துரையைப்பற்றியும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். இன்று கட்டப்பொம்மனைப்பற்றிக் கூறப்படும் வரலாறுகள் கால்டுவெல் ஐயரின் நூலை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையாகும்.

செய்நன்றி மறவாத செந்தமிழ் நாட்டார் கால்டுவெல் ஐயர் செய்த பெருஞ் சேவையை என்றும் மறந்து விடவில்லை. கம்பன், வள்ளுவன், பாரதி வரிசையிலே கால்டுவெல் ஐயனும் நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிட்டான். அவர் பெயரைக் குறிப்பிடாத இலக்கிய வரலாற்று நூல்களைக் காணமுடியாது. தமிழ் இலக்கணத்தைக் கற்பதற்கு அருந் துணையாக விளங்குவது கால்டுவெல் ஒப்பிலக்கணம். இவ்வருடம் சென்னையில் அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றபொழுது கால்டுவெல் ஐயருக்கும் சிலையெடுத்து மகிழ்ந்தனர் தமிழ் நாட்டவர். தம்மொழியின் தொன்மையை உலகுக்குணர்த்திய திறலோனின் சிலையைச் சென்னை அத்தியட்சர் திரைநீக்கம் செய்தபொழுது, உணர்ச்சிக் கடிமையாகி அப்பெருமகனைப் போற்றினர் தமிழ்நாட்டார்.

## கிறிஸ்தவ வாலிபர் சங்கமும் அதன் நோக்கமும்

Hi-y Club Secreatary
(Navaly Y. M. C. A.)

பொன்னும் பவளமும் ஏராளமாயினும் அறிவுள்ள உதடு அரிய ஆபரணம்.

இயற்கையிலே அழகானவன் போதாது போதாதென்று செயற்கையிலே தன்னை அழகுபடுத்திக் கொண்டாலும் அறிவாளியின் அழகுக்கு முன் அவன் துரும்பே யாவான்.

அண்டசராசரங்களை ஆக்கிய கடவுள் உயிர்களிலே மேலானவனாக மனிதனைப் படைத்து ஆறறிவினை அளித்துப் புதுமை மிகு புருடனாக்கியது ஏன்? அறிந்தும் அறிவிலார் போல் ஆகிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு விட்டால் அவர்களுடைய கண்கள் புதுமைகளைக் காணும். மனமோ தாறுமாறுனவைகளைப் பேசும். கடுக்கடலில் படுத்திருப்ப [illegible] மரத்தின் நுனியில் தூங்குகின்றவனைப் [illegible] இவன். என்னை அடித்தார்களே எனக்கேன் கோபமில்லை. என்னை அறைந்தார்களே எனக்கேன் 'சொரணை' இல்லை என்று அப்பொழுதுதான் விழிப்பான். இவன் கண்ணிருந்தும் குருடாய்ப் போனதென்ன, காதிருந்தும் செவிடாய்ப் போனதென்ன, மனிதனைக் கண்டால் பயந்து ஒடுங்கி ஓரமாய்ச் செல்வதென்ன? இத்தனைக்கும் காரணம், தன்னைத் தான் புறம்பே ஒதுக்கி உலக அனுபவங்களில் இருந்து தம்மைவிலக்கிவாழ்வதே. மனித உள்ளத்தின் உள்ளக் கிடக்கையை அறியாமலே இப்படி ஆகிக்கொள்ளுகின்றனர்; நல்வழியில் செல்லப் பிள்ளையைப் பழக்கு. முதிர் வயதிலும் அவன் அதை விடாதிருப்பான் என்று சத்திய வேதம் கூறுகின்றது.

மனிதன் என்றைக்கும் ஒரு மித்துச் சங்கமாகச் சேர்ந்துதான் வாழமுடியும். அவன் கூட்டுறவு பல மனிதர்களின் மனதையும் பல மனிதர்களின் அறிவையும் ஒன்றாகக் கோத்து ஓர் ஒப்பற்ற படிப்பினையை அறிய முடிகின்றது. அவன் தனக்குள் இருக்கும் உரிமையை அறிய முடிகின்றது. நாட்டிலே நல்லவர்கள்போல் பொல்லாதவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் நினைத்ததைச் சாதிக்க வேஷங்கள் பலவும் போடலாம். ஆனால் இந்த வேஷத்தை அறிவாளியால் இரண்டு நிமிஷங்களில் கலைத்து விட முடியும். அப்படியென்றால் இது எப்படிப்பட்ட வேஷம் என்று தெரிந்திருக்கவும் வேண்டும். சங்கம் இதனை எடுத்துக் காட்டிப் பலவிஷயங்களைச் சித்தரித்திருக்கலாம். அனுபவத்தின் போது அறியப்பெற்றிருக்கலாம். இதனால் மனிதன் அபாயத்தில் இருந்து நீக்கப்படக் கூடியவனாக இருந்து விடுகின்றான். "திராட்சரசம் எவ்வளவு சிவப்புப் பாத்திரத்தில் எவ்வளவு பளபளப்பு என்று நீ அதைப் பார்க்காதே" அது மெதுவாய் இறங்கும் பாம்பு போல் தீண்டும்.

சத்திய வேதம் கூறும் ஒவ்வொரு அறிவுரைகளும் ஒரு மனிதனை முழுமனிதனுக்கும் என்பதில் கொஞ்சம் கூட ஐயமில்லை. இவன் முழுமனிதனாக வருவதென்றால் அவன் அறிவு மாத்திரமல்ல அவன் குணமும் சீர்படுத்தப்படல் வேண்டும்.

தீயவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே; இதுவே அவனையுயர்த்தும். பெற்ற தாயுக்குச் செவி கொடு, சத்தியத்தை வாங்கு; அதனை விற்காதே. இப்படியான விஷயங்கள் ஒவ்வொன்றும் மனிதனை ஒவ்வொருபடி உயர்த்தும். இதனால் அவன் பூரண திருப்தி அடைந்து வாழ்க்கையில் மனக்கஷ்டம் இன்றிச் சந்தோஷமாக வாழ முடிகின்றது. இதுவே இன்றைக்குக் கிறிஸ்தவ சங்கங்கள் இடையே இருந்து கற்பிக்கப்பட வேண்டியன. இவற்றிற்குப் பாதை காட்டுவதே சங்க நோக்கமாகும்.

## என்னையா கிறிஸ்தவர் நீர்?

சாந்தா யோசப்

கல்லூரியாம், அட்மிஷனும்
கணக்கினிலே கடன் எடுத்து,
காலமெல்லாம் காத்திருந்து,
காரிகையர் தம் அடிபணிந்து
செல்லுகின்றீர் எங்கெங்கோ ?
செய்கின்றீர் ஏதேதோ, உம்
அருமைப் பெண் அகம் மரை !
நினைத்தீரா என்றுவது
அடுத்தவீட்டு அறிஞரது,
ஆசைப்பெண் ஒன்றே ஒன்று,
காசின்றி, கருத்தின்றி, மூச்சின்றி,
பேச்சின்றி, புகைகின்றாள். அன்றுடம்,
'ஐந்தாவது படிப்பே னென்று,'
கண்டிலையோ அவர்தம் கண்ணீர் ?
என்னையா கிறிஸ்தவர் நீர் ?

காலைமுதல் மாலைவரை
ஆபீஸில் அலட்டிக் கொள்வீர் ;
ஆனமட்டும் தபால் யாவும்
அரைமணியில் முடித்திடுவீர் ;
பேசுகின்றீர் வேண்டாக் கதை,
பேப்பரில் வந்த தென்று.
கென்னடியாம், குடிசைத் தீபம்—
கட்சியாவும் வெறும் பொய்யாம் !
கேட்டீரோ என்றுவது
அருகிலிருக்கும் 'அரட்டையிடம்?'
'தெய்வம் ஒன்று, கிறிஸ்து என்று
அறிவீரா நீர்?' என்று
'இல்லை' என்று சொன்னால் இன்று
என்னையா கிறிஸ்தவர் நீர் ?

வெளியெல்லாம் பொழிகின்றீர்
கிறிஸ்துவே ரட்சகரென்று ;
வீடெல்லாம் வைக்கின்றீர்
அவர்தம் திரு உருவம் ;
பதவியென்ன ? உதவ அன்றி ?
எனப் பாடுகின்றீர் ; பேசுகின்றீர்;
பறைபல சாற்றுகின்றீர்.
'காசொன்றுமில்லை கையில் ;
உரயில்லை வீடுசெல்ல,
கொடுமய்யா நோட்டு இரண்டு ;
அடுத்தமாதம் போனஸ் உண்டு,
என பணிந்து இரந்திட்டாலோ
ஓடுகின்றீர் வாசல் பக்கம்—
'யாமறியோம், உம்மை' யென்று—
என்னையா கிறிஸ்தவர் நீர்?

—மனை மலர்

## நெருங்கடி ஏற்படுமா?



பத்தர் : ரஷ்ய நாடு இப்போ நடந்து கொள்ளுகிற முறையைப் பற்றி, பல நாடுகளின் தலைவர்கள் கவலை தெரிவித்திருக்கிறார்களாமே! பெரும் வேதனையாக இருக்கிறதே! கடவுள் நல்லறிவு புகட்டி ஆட்கொள்ள மாட்டாரா ?

சித்தர் : "அப்பப்பா! பெரும் அநீதி. நடக்கக் கூடாததெல்லாம் நடக்குது ; மனிதனை மனிதனாக மதிப்பவனே மனிதன் ; மனித சக்தி நாடெங்கும் விளங்க வேண்டும் ரஷ்ய நாட்டிலே இத்தகைய நாடர்பில் ஒரு சிறு சத்தியாக்கிரகம் ஒரு நாட்டில் ஆரம்பமாகியதாம்! சத்தியாக்கிரகத்தின் புனித தத்துவத்தை நம்மிற் பலர் சரிவர உணரவில்லை. மகாத்மா காந்தி அதைப்பற்றி என்ன சொன்னார் தெரியுமா ?

ஒரு சத்தியாக்கிரகி தன்னைப் பீரங்கியின் வாயில் வைத்துச் சுட்டுச் சுக்குச் சுக்காக்கிச் சிதற அடித்தாலும் தன் மனச்சாட்சிக்கு எதிரான சட்டத்தை எதிர்த்தே நிற்பான்.

பீரங்கிக்குப் பின்னால் இருந்துகொண்டு சுட்டு, மற்றவர்களைச் சிதற அடிப்பது வீரமா அல்லது புன்முறுவல் பூத்த முகத்துடன் பீரங்கியையணுகிச் சுக்கலாகிச் சிதறுண்டுபோவது வீரமா? உண்மையான வீரன் யார்? சாவை எப்பொழுதும் தனது ஆப்த நண்பனாக வைத்துக்கொண்டிருப்பவனா அல்லது மற்றவர்களின் மரணத்துக்கு வழி செய்கிறவனா? உண்மையில் சத்தியாக்கிரகிதான் சுத்த வீரனாவான்.

— காயன்மார் நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

30TH AUGUST, 1968.

## PROHIBITING KNOWLEDGE

We are surprised that the authorities concerned have not heeded the protests, wide-spread and strong though they were, which were made against the inclusion of the import of books, magazines and journals in the E. F. C. Scheme. They have decided, it is reported, not to change the original decision. Just what it is that made them so insistent cannot be understood. The protests voiced against this were on very good grounds. The 45 % surcharge levied on foreign exchange for books and journals was regarded as very heavy and rightly called a tax on knowledge. Many text books, essential for use by students, and other extra reading resources of help to them in their studies come under this scheme. These protests have come not merely from booksellers, but also from educationists from all over the country. Even in Parliament convincing illustrations were given of the immense hardships which would be heaped on students by such a surcharge. Members from both sides in Parliament, the Government and the Opposition, were united in registering their protests. Still those responsible for the implementation of the scheme have preferred to continue the iniquitous tax. Is there no higher body that can alter their decision? We wish to appeal to the Prime Minister and his Cabinet to use their power to have justice done.

As our esteemed contemporary, the *Co-operator*, has said "What is in peril now is the freedom of ideas regardless of frontiers". This heavy surcharge goes against the Universal Declaration of Human Rights, which says: "Everyone has the right to freedom of opinion and expression; this right includes freedom to hold opinions without interference and to seek, receive and impart information and ideas through any media and regardless of frontiers". And the consequence of this ill-thought out proposal will be very ruinous to the people of our country. In the words again of the *Co-operator*: "A country where, in spite of illusory figures of literacy, functional literature is low, and which was described not long ago as a 'cultural desert', can ill-afford to reduce its share of current books and journals. Nor can it be argued that the production of local literature will gain by keeping out foreign writing in the way that import substitution comes into play in the case of consumer goods. Rather, it is what is first rate that creates and sustains the reading habit and stimulates local writing too in the process!"

O

### ASHRAM ANNIVERSARY

The anniversary of the Christa Seva Ashram, Maruthanamadam, was celebrated on the 22nd inst. The celebrations commenced with a Holy Communion Service at the Ashram Chapel, led by the Rev. (Sevak) Sam. Alfred. The sermon was preached by the Rev. Alfred Chinniah, of the Church of Ceylon. It was followed by a baptism through immersion of three young people. The Rev. (Sevak) I. T. Yesusagayam officiated at this ceremony.

At 10.30 a. m. a Thanksgiving Service was held, conducted by the youth of the North Eriaiai Church (C. S. I.). The Rev. D. S. Dharmapalan, of the Murunkan Methodist Church, preached the sermon. This was followed by a Conference.

In the afternoon at 4.30 the Public Meeting was held, presided over by Dr. W. L. Jeyasingham, President of Jaffna College. The Lesson was read by Mas. Selvanathan. Addresses were delivered by Mr. C. J. Bennet, a representative of the British Methodist Conference, and Miss M. P. Dore. Sevak I. T. Yesusagayam proposed the vote of thanks.

## UNITY, REVIVAL AND MISSION

### Some basic needs of our Churches today

*By the Rev. Celestine Fernando*

(Notes of an address at the Annual Meeting of the National Christian Council held on Monday, 24th June, 1968, at the Y. M. C. A., Colombo.)

(continued from last issue)

II

In the light of this conviction may I make this appeal?

*First*: let us *take the Presence of the Risen and Redeeming Christ seriously* — through faithful and fervent, regular and powerful *Prayer and Bible Study* — both personal and corporate, inviting little groups of people to join us in Prayer and Bible Study and embracing all Christian people. We ought to look for the day when every Christian belongs to such a group and when there are many such groups in every Church and all over the country of people who relate their Prayer and Bible Study to their daily vocation and work. If we who are in Christ are careless, or fearful, even of such Prayer and Bible Study, because of our differences, let us ask what right we have to plead for unity of the nation or even to say that we must pray and work for Church unity; and how we who, being Christians, cannot pray and study the Bible together, can preach a Gospel for "secular" man?

May I, therefore, appeal to the leaders of the Churches (Is it quite right to call them 'heads' for there is only one 'head' of the Church — even Christ — and our use of the wrong term may well give us a wrong idea of human power and authority?) with a sense of urgency themselves to come together for this quiet and powerful purpose. Prayer Groups in which Church-leaders of all the Churches in every place actively and regularly participate can be a great power in our land. This is far more important than the spectacular getting together on ceremonial and public occasions. To me the latter without the former seems to be much an empty thing — almost "sounding brass and a clanging cymbal," And, yet, in our day full of the noise of solemn world and national assemblies, even the "sounding brass and a clanging cymbal," under Christian auspices, may be able to play some part in human redemption. Who can tell?

*Secondly*, at this Council meeting a very important proposal has been made both by a faithful and hardworking minister and a devoted and experienced lay son of a distinguished minister and scholar who was honoured by the Buddhist monks of our land, that we should all co-operate in a very prayful and well-planned evangelistic campaign in 1970. In order to help in this, may I suggest that each of our Constituent Churches begin by making *a scientific self-study of its own life*. This should include a study of the standards and patterns of behaviour of its leaders, its officers and Committee members, the structures of its organisation, how much time is wasted by sometimes overlapping, and often unessential, Conferences, Councils, Boards and Committees, whether we use our God-given powers of speech responsibly, specially in the privacy of Board and Committee, what happens in various power-groups meeting before and behind these bodies. Such a study should also examine carefully what the conditions of work, wages, appointments, transfers and housing are of our ministers and evangelists right on to church keepers. What happens when they are ill or incapacitated, how often there is genuine and systematic parish visiting, pastoral care, Scripture evangelism in our parishes, pastorates and circuits and how all these react on our serving the neighbourhood in which we live and on people, specially young people in our churches, in their response to Church membership and the call to ordination are also questions that need to be asked. All this, done in the spirit of Prayer and in the light of the Bible with a personal conviction of the Reality of the Risen Christ and the personal experience of His forgiveness and our common responsibilities in the Body of Christ, will bring out a spiritual and organisational revolution which all the Churches seem to need just now — and which will be an essential pre-requisite to a generally effective Evangelistic Campaign.

At an important meeting of a certain Episcopal Church not long ago — I was told by a distinguished scholar and teacher of our Church leaders that "they are administering rather than ministering"! But is this true of all our Churches? Certainly administration itself can also be a ministration and in a Christian organisation it certainly ought to be. But it will be so only if such administration is prayerful, Scriptural, pastoral and personal in spirit and perspective. But what about *the time required* for all this? Is it available? Do we take it? Do we make it? Sometime ago, in one of the non-Episcopal Churches in our land, a well-known leader describing the chief administrator of his Church, said: "He has no time for the personal problems of his clergy." So my concern is not to draw any distinction between Episcopal and non-Episcopal Churches but simply to state a deep spiritual problem of all our Churches and Christian institutions — a problem in which all of us are involved: and to beg of us all to take this central matter seriously, for, if shepherds need shepherding and there is no time to shepherd, who will take care of the sheep? The Bible is hard on errant shepherds — but the Good Shepherd always points the way and has the resources to redeem us all!

*Thirdly*: today the laymen of the world are becoming more and more concerned with their important and responsible role in the life of all the Churches — not to be ring-side advisers, financiers, accountants and builders and generally cheer-leaders henchmen to the clergy and occasionally preachers, but to be '*priests of God*' on their own right. For don't we all now know that the Bible clearly talks of "The priesthood of all believers"? Few today would agree with the man who wrote:

"The layman's emerging ...
Who let him out?
He'll cause confusion
Without a doubt.
Who taught that chap
To pray out loud?
He was easier to handle
In a nice, quiet crowd.
Someone grab his missal,
Take his hymn book, too;
Push him off the lectern —
Back into the pew,
Submerge that layman,
Lower the boom!
We'll get this place again
Quiet as a tomb."

And so let me quote what a very distinguished English layman of my Communion, Sir Kenneth Grubb, has to say on the Laity — in the latest edition of the World Christian Handbook (p. ix), the other essays in which too (despite its very far from correct statistics about Ceylon due to our failure to supply these) I would like to commend;

"The laity today are objects of interest almost everywhere in the Church. The clergy are a little uncertain how to handle them, and their life and role have been the subject of many treatises. It is felt desirable that they should exist, and I have not seen any proposal for their abolition. The World Council of Churches even publishes a bulletin under the title "Laity" and at intervals it is intelligible, although not very readable. Brevity is not the soul of it. The review *Frontier* is entirely the initiative and work of laymen, and there are other such publications. Vatican Council II took due note of the laity. There has been in many countries much ado about industrial missions. It is natural that in a day when organized religion is hard pressed by secular and humanist thought, and in certain countries churches are very thinly attended, the laity should suddenly be remembered. They must be trained; they must be mobilized; they must be put to work; they must pray; they must produce money. Noble and high-minded clergymen are wrestling gallantly with all this, but I suspect that there is in most communions an inbred tendency to clericalism. The next decade will show.

The corollary of much of this is that the clergy themselves must be better trained. The presentation of the Gospel is not simply a matter of intel- [illegible] good when professional laymen in the pew have a more rigorous training in their own discipline than the clergy have in theirs. The right not to answer the unanswerable questions about man's destiny depends on the ability to answer the answerable ones."

A further corollary, of course, is that the laity too must have a true sense of what priesthood means and not merely be content with the desire and the ability to talk about it. For example, *Priesthood means sacrifice* and, if there is a Priesthood of all believers, there ought also to be a *sacrifice of all believers*. Like the over-weening, domineering 'priest who is ordained', and who thinks that the laity are against him, so the over-weening, domineering 'priest who is a layman' and who thinks that the clergy are against him is also a sad and dangerous reality. And there are lay leaders who, like their clerical counter-parts, can harm the Church very seriously, when they are led by a sense of power (administrative or financial) and of personal prejudice. And so it will be good for us all to study the implications of Priesthood and sacrifice of *all* the believers — not the clergy alone — in relation to our standards of behaviour and conditions of work and pay. For while the Churches seem to show distinctions here, the Holy Scriptures do not seem to do so. In the Bible there is no distinction between the laity who may enjoy comforts and the clergy who may not. The same rules apply to all. And all of us are called to a life of sacrifice i. e. to 'make a holy thing' as the Latin words mean. (See on all this Ezekiel 34 and the Letters to the Hebrews and Timothy.)

(To be continued)

*Devotional*

## THE THRILL OF FOLLOWING JESUS CHRIST

By the Rev. Dr. James S. Mather

The day my eldest child was born at Inuvil was one of the most thrilling days in my life. Seeing his tiny fingers, tiny eyes etc., gave me a peculiar feeling difficult to describe. Soon after, how I cycled fast, as I never did before or after, to Manipay, to tell my mother about her new-born grand-son! A similar thrill I had many years later, when our country got its Independence, in 1948, after long years of domination by foreign powers. It was a most thrilling experience to be at that great assembly, along with Heads of other Churches, and of other religious bodies, sitting close to the Duke of Gloucester, filled with the thought, 'We are now free'! But there is a far greater thrill that every one who tried sincerely to follow Jesus Christ had all his life:—

(1) *The thrill that he, a poor sinner, was wanted by God, "the Creator and Preserver of all mankind", for His business of recreating the world.*

The Bible taught that God wanted to re-make the world He had created, but had gone wrong by man's sin; and that, in this great business, He wanted man to be His co-worker, and partner. It is certainly a great Truth, which gives man a great thrill, incomprehensible, and fills him with a deep sense of unworthiness, as well as with wonder and awe. This is God's way, as revealed in the Bible. Look at God, calling a shepherd boy David, and not an experienced soldier, to fight with the giant, Goliath! Look at Him, calling a fisherman, Peter, to write two out of the 66 Books of the Bible! Two Books, full of Divine Wisdom!! Today, God gives this same thrill to any man or woman, whatever the past be, when they try sincerely to follow Jesus Christ as their Saviour and Lord.

(2) *The thrill that he can have constant communication with the King of Kings.*

Just imagine God, so great and glorious, sitting in His great Throne, ruling and overruling the Universe He created, and in full control of all things, and yet giving man, poor sinner as he is, the right and privilege of approaching him any time he wished to do so! Imagine a telephone line in your own home, being connected direct with His great Throne! You are granted the right to ring Him up, any time, day or night!! What a thrill-giving privilege!!

(3) *The thrill that his life can ever be one of Peace and Joy, inspite of any 'misfortune' that may come.*

There are many people who worry and fret, when they face difficulties in life. Doctors say that the disease that kills most people is worry. People who worry forget that worry does not solve any of their problems, but they only cause one's difficulties to increase and multiply. When a man or woman tries sincerely to follow Jesus Christ, they find their mind and heart focussed on God, and that there is nothing to fear. Sometime ago, I invited a Medical Specialist. It was about 11 a. m. and he looked very tired. Before I could speak to him, he said, 'This morning I have examined 21 patients', and sighed. Continuing he said, '19 of them do not need medicine, as much as religion. They need God, their problem is spiritual.' More and more, the world today is beginning to see that there is a strong link, between the spiritual, and the physical, even as our Lord taught. See St. Mark 2. Before physical cure, the man was in need of forgiveness of sins. When a man followed Jesus Christ, and a right relationship between him and his Lord was established, then life cannot but be one of peace and joy. This is the reason why the Master compared His religion, or way of life, to 'a wedding feast'; and in the Parable of the Prodigal Son spoke of feasting and rejoicing when the son returned home. We are called of God to a life of peace and happiness, and in a sinful world, with all battles and storms, this life becomes one's own experience, when one tries to follow Him sincerely. Oh! the thrill of following Jesus Christ!!

O

## FROM FAR AND NEAR

### W. C. C. SENDS SECOND TEAM TO AID WAR VICTIMS IN NIGERIA

A doctor, three nurses, and two specialized relief workers, all Danes, recruited for the World Council of Churches' programme on behalf of victims of the year-long civil war in Nigeria, has gone to Lagos.

This is the second medical team that the World Council has so far sent to work in Nigeria. Like the earlier party, they will be attached to the Christian Council of Nigeria but seconded to the International Committee of the Red Cross, although employed by the W. C. C. They took with them a considerable stock of urgently needed medical supplies which will be augmented by a plane-load of medicines, vaccines, and other necessities to be flown to Nigeria under charter to the World Council of Churches.

To expand and intensify the relief services which the churches through the W. C. C's Division of Inter-Church Aid have been carrying on for war victims on both sides of the Nigerian conflict, the Fourth Assembly of the World Council at Uppsala, Sweden, last month authorized that an appeal should be made for $3,000,000 in cash.

So far, the Division has arranged 10 airlifts of more than 100 tons of dried milk, powdered eggs, baby food, and medicines to the war zones for persons starving to death as a consequence of the conflict and has also sent three shiploads of high protein dried fish totalling 1,400 tons.

## THE STEPS TO TRUE SANITY

All mankind desperately needs God's Holy Spirit! A human mind guided by the Holy Spirit from God finds peace, happiness, spiritual power and eternal life.

The results of having God's Holy Spirit within are "love, joy, peace, longsuffering, gentleness, goodness, faith, meekness, temperance". (Gal, 5 : 22 – 23).

But the carnal mind, without God's Spirit, is hostile toward God, (Rom. 8 : 7), and cannot think spiritually. To put it plainly, we are not fully sound-minded until we think like God! Most carnal-minded persons have normal minds. That is, they generally think soundly, can come to certain right decisions, can be emotionally well balanced. But without the revelation of God's Word and the indwelling of His Holy Spirit they go off in wild theories in guessing about what is morally right or wrong. No mind is truly full and complete unless that person has received God's Holy Spirit.

The "sound mind" which comes through God's Spirit means just what it implies. It is a truly balanced mind. The man possessing it is a balanced man — a *whole man*. He is guided by the supreme mind of God Almighty. Only the Holy Spirit can impart the deep understanding of our real purpose and goal in life. Man has yet to realise that the spiritual power available through God's Holy Spirit is the power needed for true sanity, self-mastery, for accomplishment, success, abundant joy, peace of mind and the happiness we all desire. God's Holy Spirit can free us from fear, frustration and the threat of mental illness plaguing mankind today. God's Holy Spirit imparts mental health, happiness and sound mindedness.

First, we must "thirst" for and sincerely desire God's Holy Spirit more than anything else. Jesus said: "If any man *thirst*, let him come unto me and drink. He that believeth on me as the scripture hath said out of his belly shall flow rivers of *living water!* But this spake He of the Spirit which they that believe on Him should receive", (John 7 : 38 – 39).

Peter then clearly defined the way to receive the Spirit of Power; "Repent, and be baptised and ye shall receive the gift of the Holy Spirit" (Acts 2 : 38). When we are reconciled to God by the death of Christ as a result of our sincere repentance of past sins, faith in Christ's shed blood for the remission of our sins and our submitting in the waters of baptism, then God is more willing to give us His Spirit than we are willing to give bread to our children! (Luke 11 : 10, 13). God gives His Holy Spirit only "to them that obey Him" (Acts 5 : 32).

We can then understand the answers to our big questions concerning our very existence, we can learn the meaning of today's chaotic world conditions and how we can escape the nuclear holocaust awaiting this present generation!

S. P. K. SOLOMON.

1968 Subscriptions of Rs. 15 due now

Manager

Printed and published for the American Ceylon Mission by Mr. Abraham Saravanamuthu Thambiratnam, residing at Manipay, at the American Ceylon Mission Press, Uduvil Road, Manipay, on Friday, 30th August 1968.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org